DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.86/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW6 | Caste | : | |
| Name | : | சந்திரன் | Age | : | 47 |
| F/N | : | கருப்பையா | Occupation | : | வியாபாரம் |
| Village | : | சாத்தாக்கோன்வலசை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 15th day of December 2023.

**15.12.2023**
**(எதிரி ஆஜர்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் சாத்தாக்கோன்வலசையில் குடியிருந்து கொண்டு வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் 8 வது மாதம் ஒரு நாள் நானும், ஜோதிபாசு என்பவரும் இருசக்கர வாகனத்தில் எங்கள் ஊரில் இருந்து உச்சிப்புளிக்கு தேசிய நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்தபோது பிரப்பன்வலசைக்கும், எங்கள் ஊருக்கும் இடைப்பட்ட பகுதியில் உச்சிப்புளி காவல் நிலைய போலீசார் இருசக்கர வாகன விபத்து வழக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். பின்னர் என்னிடமும், ஜோதி பாசு என்பவரிடமும் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். (**பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை** : இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM
**C.C.No.86/2020**

| Deposition of the | : | PW7 | Caste | : | |
|---|---|---|---|---|---|
| Name | : | ஜோதிபாசு | Age | : | 43 |
| F/N | : | பொன்னாண்டி | Occupation | : | வியாபாரம் |
| Village | : | சாத்தாக்கோன்வலசை | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 15th day of December 2023.

**15.12.2023**
**(எதிரி ஆஜர்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் சாத்தாக்கோன்வலசையில் குடியிருந்து கொண்டு வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் 8 வது மாதம் ஒரு நாள் காலை 06.00 மணியளவில் நானும், அ.சா.6 ம் இருசக்கர வாகனத்தில் எங்கள் ஊரில் இருந்து உச்சிப்புளிக்கு தேசிய நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்தபோது பிரப்பன்வலசை கோல்டன் பார்க் ஹோட்டல் அருகே உச்சிப்புளி காவல் நிலைய போலீசார் வாகன விபத்து வழக்கு சம்பவயிடத்தை பார்வையிட்டு படம் வரைந்து கொண்டிருந்தார்கள். பின்னர் என்னிடமும், அ.சா.6 னிடமும் கையொப்பம் வாங்கினார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை** : இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,
RAMANATHAPURAM

**C.C.No.86/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW8 | Caste | : | |
| Name | : | நந்தகுமார் | Age | : | 46 |
| F/N | : | கருணாமூர்த்தி | Occupation | : | சார்பு ஆய்வாளர், இராமநாதபுரம் பொருளாதார குற்றப்பிரிவு |
| Village | : | | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 15th day of December 2023.

**15.12.2023**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் பொருளாதார குற்றப்பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 31.08.2019ம் தேதி அதிகாலை 12.30 மணியளவில் உச்சிப்புளி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது இராமநாதபுரம் மாவட்டம் உச்சிப்புளி எஸ்.எம்.காலனியை சேர்ந்த ஆறுமுகம் மகன் சந்திரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று அதன் தன்மைக்கேற்ப உச்சிப்புளி காவல் நிலைய குற்ற எண்.312/2019 பிரிவுகள் 279, 304 A இதசஆக வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** முதல் தகவல் அறிக்கையின் அசலையும், புகார் மனுவையும் சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் திரு.முத்துபிரேம்சந்த் அவர்களின் பார்வைக்கு சமர்ப்பித்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**